## <u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திட்டக்குடி.</u>

**முன்னிலை: திருமதி. B. ஹரிணிபிரியா, B.A., L.L.B.,(Hons).,**

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, திட்டக்குடி.
**2026 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 09ஆம் நாள் திங்கள் கிழமை**

**அசல் வழக்கு எண்.7/2016.ல்**

**வழக்கிடை மனு எண்.7/2026**

சிவராமகிருஷ்ணன் ... மனுதாரர்/வாதி

.. எதிர் ..

1.கோவிந்தராஜீலு
2.ஸ்ரீதர்
3.தனபால் (இறந்தார்)
4.சுப்பையா
5.ஜெயா
6.தனலெட்சுமி
7.சரோஜா (இறந்தார்) பை வாரிசுகள் 9, 10 எதிர்மனுதாரர்கள்
8.இணை ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை, விழுப்புரம்
9.சுமதி
10.சாந்தி
11.முத்துலெஷ்மி
12.வேல்முருகன் ... எதிர்மனுதார்கள்/பிரதிவாதிகள்

இம்மனுவானது 14.11.2025ஆம் தேதியன்று தாக்கல் செய்யப்பட்டு 09.01.2026ஆம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டது. மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.எம்.காமராசு அவர்கள் முன்னிலையாகியும், 1, 4, 7ம் எதிர்மனுதாரர்கள் /எதிர்வாதிகள் இறந்துவிட்டதால் அவர்களை நீக்கரவுச்செய்யப்பட்டும், 2, 5, 9, 10 எதிர்மனுதாரர்கள் / எதிர்வாதிகள் அசல் வழக்கிலேயே

தோன்றாதரப்பினராகப்பட்டுள்ளார்கள். 11, 12 எதிர்மனுதாரர்கள் தரப்பில் இந்நீதிமன்றத்தால் அழைத்தும் முன்னிலையாகாததால் தோன்றாதரப்பினராக்கப்பட்டுள்ளார்கள். 6வது எதிர்மனுதாரர் / எதிர்வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.செந்தில்சரவணன் என்பவர் கடந்த 06.02.2026ஆம் தேதியன்று எதிருரை தாக்கல் இல்லை என்று ஒப்புதல் அறித்துள்ளார். இம்மனு 06.02.2026ஆம் தேதியன்று இறுதி விசாரணைக்காக வந்தபோது மனு, மனுதாரர் தரப்பு வாதங்கள் மற்றும் கிடைக்கப் பெற்ற ஆவணங்கள் ஆகியன பரிசீலனை செய்தும், இதுநாள் வரை என் சீரிய ஆய்விலிருந்து வரும் இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்...

**உத்தரவு**

இம்மனுவில் கண்டுள்ள காரணங்களுக்காக இந்நீதிமன்றத்தாரவர்கள் அருள்கூர்ந்து இம்மனுவை ஏற்று, இறந்த 3வது பிரதிவாதி தனபாலுவிற்கு 90 நாட்களுக்குள் வாரிசு மனு தாக்கல் செய்யாத காரணத்தால் ஏற்பட்ட அபேட்டை ரத்து செய்து கொண்டு வழக்கை மேல்நடத்த உத்தரவிட வேண்டி, உரிமையியல் விசாரணை நடைமுறை தொகுப்பு சட்டத்தின் ஆணை 22 விதி 9ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

**2. மனு சங்ககதிகளின் சுருக்கம்**

**2.1** மனுவில் மனுதாரர் அசல் வழக்கில் வாதி என்றும் மேற்படி வழக்கில் தான் எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளதாகவும், மேற்படி வழக்கு விசாரணைக்கு வாய்தா உள்ளது என்றும் இந்த வழக்கு நிலுவையில் இருக்கையில் 3வது பிரதிவாதி தனபால் கடந்த 27.12.2022ல் இறந்துவிட்ட விபரம் தனக்கு தற்போதுதான் தெரியவந்தது என்றும் 3வது பிரதிவாதி தனபாலுவிற்கு முத்துலெஷ்மி என்ற மனைவியும், வேல்முருகன் என்ற மகனும் வாரிசுகளாவார்கள்,

அதனால் 3வது பிரதிவாதி தனபாலுவின் வாரிசுதாரர்களை அசல் வழக்கில் 11 மற்றும் 12 பிரதிவாதிகளாக சேர்க்க மேற்படி இறந்த 3வது பிரதிவாதி தனபாலுக்கு 90 நாட்களில் வாரிசு மனு தாக்கல் செய்ய வேண்டும். 3வது பிரதிவாதி தனபால் இறந்த விபரம் தனக்கு தற்போதுதான் தனக்கு தெரிய வந்ததால், உடன் காலத்தில் வாரிசு மனு தாக்கல் செய்யவில்லை என்று வேண்டுமென்றோ அலட்சியமாகவோ இருக்கவில்லை. அதனால் வழக்கு அபேட் ஆகிவிட்டது. மேற்படி அபேட்டை ரத்து செய்ய வேண்டியது அவசியமாகவும் நியாயமாகவும் உள்ளது. இல்லையேல் தனக்கு ஈடுசெய்ய முடியாத கஷ்டமும் நஷ்டமும் என்று கூறப்பட்டுள்ளது.

**3.** 1, 4, 7ம் எதிர்மனுதாரர்கள் /எதிர்வாதிகள் இறந்துவிட்டதால் அவர்களை நீக்கரவுச்செய்யப்பட்டும், 2, 5, 9, 10 எதிர்மனுதாரர்கள் / எதிர்வாதிகள் அசல் வழக்கிலேயே தோன்றாதரப்பினராகப்பட்டுள்ளார்கள். 11, 12 எதிர்மனுதாரர்கள் தரப்பில் இந்நீதிமன்றத்தால் அழைத்தும் முன்னிலையாகாததால் தோன்றாதரப்பினராக்கப்பட்டுள்ளார்கள். 6வது எதிர்மனுதாரர் / எதிர்வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.செந்தில்சரவணன் என்பவர் கடந்த 06.02.2026ஆம் தேதியன்று எதிருரை தாக்கல் இல்லை என்று ஒப்புதல் அறித்துள்ளார்.

**4.** மனுதாரர் தரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன.

5. **இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.**

**5.1** மனுதாரரர் தரப்பு வாதம் என்னவெனில் மனுவில் மனுதாரர் அசல் வழக்கில் வாதி என்றும் மேற்படி வழக்கில் தான் எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளதாகவும், மேற்படி வழக்கு விசாரணைக்கு வாய்தா உள்ளது என்றும் இந்த வழக்கு நிலுவையில் இருக்கையில் 3வது பிரதிவாதி தனபால் கடந்த 27.12.2022ல் இறந்துவிட்ட விபரம் தனக்கு தற்போதுதான் தெரியவந்தது என்றும் 3வது

பிரதிவாதி தனபாலுவிற்கு முத்துலெஷ்மி என்ற மனைவியும், வேல்முருகன் என்ற மகனும் வாரிசுகளாவார்கள், அதனால் 3வது பிரதிவாதி தனபாலுவின் வாரிசுதாரர்களை அசல் வழக்கில் 11 மற்றும் 12 பிரதிவாதிகளாக சேர்க்க மேற்படி இறந்த 3வது பிரதிவாதி தனபாலுக்கு 90 நாட்களில் வாரிசு மனு தாக்கல் செய்ய வேண்டும் என்றும் 3வது பிரதிவாதி தனபால் இறந்த விபரம் தனக்கு தற்போதுதான் தனக்கு தெரிய வந்ததால், உடன் காலத்தில் வாரிசு மனு தாக்கல் செய்யவில்லை என்று வேண்டுமென்றோ அலட்சியமாகவோ இருக்கவில்லை என்றும் அதனால் வழக்கு அபேட் ஆகிவிட்டது என்றும் மேற்படி அபேட்டை ரத்து செய்ய வேண்டியது அவசியமாகவும் நியாயமாகவும் உள்ளது என்று வாதிடப்பட்டுள்ளது.

**5.2** இவ்வழக்கின் ஆவணங்களை நன்கு பரிசீலனை செய்கையில் அசல் வழக்கில் 3ம் பிரதிவாதி தனபால் கடந்த 27.12.2022ல் இறந்துவிட்டார் என்றும் 3ம் பிரதிவாதி தனபால் என்பவருக்கு முத்துலெஷ்மி என்ற மனைவியும், வேல்முருகன் என்ற மகனும் வாரிசுகள் என்று கூறப்பட்டுள்ளது. எனவே இறந்து போன 3ம் பிரதிவாதி தனபாலின் பிரதிநிதிகள் என்பதாலும், மேற்படியாரின் வாரிசுகளை சேர்த்து அசல் வழக்கினை மேல்நடத்தும் பட்சத்தில் தான் வழக்கினை திறம்பட தீர்மானிக்க இயலும் என்பதாலும், நீதியின் நலன் கருதி இம்மனுவினை அனுமதிக்கலாம் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

7. **இறுதியாக**

இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு வாய்மொழியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால்

பிழைதிருத்தம் செய்யப்பட்டு 2026 ஆம் ஆண்டு பிப்ரவரி 09ஆம் நாள் திறந்தவெளி நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

**(ஓம்.B. ஹரிணிபிரியா )**

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திட்டக்குடி.

மனுதாரர் தரப்பில் சாட்சி மற்றும் சான்றாவணங்கள் : இல்லை
எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சி மற்றும் சான்றாவணங்கள் :இல்லை

**(ஓம்.B. ஹரிணிபிரியா )**

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திட்டக்குடி.